கடலூர் கிழக்கு மாவட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

முதலமைச்சர் கழக தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைக்கினங்க கடலூர் கிழக்கு மாவட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது என்று வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினரும், கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

அது வருமாறு:

17.08.2024 அன்று அண்ணா அறிவாலத்தில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில், கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கடலூர் கிழக்கு மாவட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெறும். அதுசமயம் மாநகர கழக செயலாளர், ஒன்றிய கழக செயலாளர்கள், நகர கழக செயலாளர்கள், பகுதி கழக செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர்கள் கூட்ட ஏற்பாடுகளை செய்யும்படியும், பொது உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறார்கள்.

வ. எ.	நாள்	நேரம்	சட்டமன்றத் தொகுதி	மாநகரம்/ ஒன்றியம்/ நகரம்/ பகுதி/ பேரூர்	கூட்டம் நடைபெறும் இடம்
1	09.09.2024	காலை 10 மணி	காட்டுமன்னார் கோயில்	காட்டுமன்னார்கோயில் ஒன்றியம், காட்டுமன்னார்கோயில் பேரூர்	லலிதா மஹால் காட்டுமன்னார்கோயில்
2	28.08.2024 அன்று நடத்தி முடிக்கப்பட்டது	காலை 10 மணி	காட்டுமன்னார் கோயில்	திருமுட்டம் கிழக்கு ஒன்றியம்	ஜெ கே டீலக்ஸ் திருமண மண்டம் குமாரகுடி
3	03.09.2024	மாலை 4 மணி	காட்டுமன்னார் கோயில்	திருமுட்டம் மேற்கு ஒன்றியம்	கே ஆர் கே திடல் தேத்தாம்பட்டு
4	28.08.2024 அன்று நடத்தி முடிக்கப் பட்டது.	மாலை 4 மணி	காட்டுமன்னார் கோயில்	திருமுட்டம் பேரூர்	கிரீன்பார்க் மண்டபம் திருமுட்டம்
5	01.09.2024	மாலை 4 மணி	காட்டுமன்னார் கோயில்	குமராட்சி வடக்கு ஒன்றியம்	எ.பி.எம் திருமண மண்டபம் எள்ளேரி
6	01.09.2024	காலை 10 மணி	காட்டுமன்னார் கோயில்	குமராட்சி தெற்கு ஒன்றியம்	எ.பி.எம் திருமண மண்டபம் லால்பேட்டை
7	01.09.2024	காலை 12 மணி	காட்டுமன்னார் கோயில்	லால்பேட்டை பேரூர்	எ.பி.எம் திருமண மண்டபம்லால்பேட்டை
8	01.09.2024	காலை 10 மணி	காட்டுமன்னார் கோயில்	குமராட்சி மேற்கு ஒன்றியம்	வடக்கு மாங்குடி ரைஸ்மில் அருகில்
9	01.09.2024	காலை 12 மணி	குறிஞ்சிப்பாடி	கடலூர் மேற்கு ஒன்றியம்	கே.கே.ஜீ திருமண மண்டபம் நடுவீரப்பட்டு
10	01.09.2024	காலை 10 மணி	குறிஞ்சிப்பாடி	கடலூர் கிழக்கு ஒன்றியம்	கே.பி.லோகாம்பாள் திருமண மண்டபம் கண்ணாரப் பேட்டை
11	25.08.2024 அன்று நடத்தி முடிக்கப்பட்டது	மாலை 4 மணி	குறிஞ்சிப்பாடி	குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம், குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றியம், வடலூர் நகரம், குறிஞ்சிப்பாடி பேரூர்	மங்கையர் கரசி திருமண மண்டபம் வடலூர்
12	02.09.2024	நன்பகல் 12 மணி	புவனகிரி	கம்மாபுரம் வடக்கு ஒன்றியம்	கலைஞர் படிப்பகம் மந்தாரக் குப்பம்
13	08.09.2024	மாலை 4 மணி	புவனகிரி	கம்மாபுரம் தெற்கு ஒன்றியம்	மல்லிகா கிருஷ்ணா திருமண மண்டபம் கம்மாபுரம்
14	10.09.2024	காலை 10 மணி	புவனகிரி	கம்மாபுரம் மத்திய ஒன்றியம்	சற்குணம் திருமண மண்டபம் அரசக்குழி
15	08.09.2024	மாலை 3 மணி	புவனகிரி	திருமுட்டம் வடக்கு ஒன்றியம்	கலைஞர் திடல் கீரனூர்
16	02.09.2024	காலை 10 மணி	புவனகிரி	புவனகிரி மேற்கு ஒன்றியம்	ஜெகன் திருமண மண்டபம் சேத்தியா தோப்பு
17	10.09.2024	மாலை 4 மணி	புவனகிரி	கீரப்பாளையம் கிழக்கு ஒன்றியம்	ஆதிலட்சுமி திருமண மண்டபம் கீரப்பாளையம்
18	10.09.2024	காலை 12 மணி	புவனகிரி	கீரப்பாளையம் மேற்கு ஒன்றியம்	ஆதிலட்சுமி திருமண மண்டபம் கீரப்பாளையம்
19	01.09.2024	மாலை 4 மணி	புவனகிரி	புவனகிரி கிழக்கு ஒன்றியம்	தேவாங்க சமூக மஹால் புவனகிரி
20	02.09.2024	காலை 10 மணி	புவனகிரி	கெங்கைகொண்டான் பேரூர்	கலைஞர் படிப்பகம் மந்தாரக் குப்பம்
21	01.09.2024	காலை 10 மணி	புவனகிரி	புவனகிரி பேரூர்	தேவாங்க திருமண மண்டபம் புவனகிரி
22	02.09.2024	காலை 10 மணி	புவனகிரி	சேத்தியாதோப்பு பேரூர்	ஜெகன் திருமண மண்டபம் சேத்தியா தோப்பு
23	02.09.2024	காலை 10 மணி	கடலூர்	கடலூர் வடக்கு ஒன்றியம்	கிருஷ்ணா திருமண மண்டபம் நல்லத்தூர்
24	02.09.2024	மாலை 5 மணி	கடலூர்	கடலூர் தெற்கு ஒன்றியம்	அபிராமி திருமண மண்டபம் வரக்கால்பட்டு
25	02.09.2024	காலை 10 மணி	கடலூர்	கடலூர் மாநகரம்	வன்னியர் திருமண மண்டபம் திருப்பாதிரி புலியூர் கடலூர்
26	28.08.2024 அன்று நடத்தி முடிக்கப்பட்டது	மாலை 05 மணி	கடலூர்	மஞ்சக்குப்பம் பகுதி	பாவுனாம்பாள் திருமண மண்டபம் பென்னையாறு ரோடு
27	30.08.2024 அன்று நடத்தி முடிக்கப்பட்டது	காலை 10 மணி	கடலூர்	புதுபாளையம் பகுதி	ஹோட்டல் தீர்த்தாபார்க் பாரதி சாலை
28	23.08.2024 அன்று நடத்தி முடிக்கப்பட்டது	காலை 10 மணி	கடலூர்	திருப்பாதிபுலியூர் பகுதி	மாமன்ற உறுப்பினர் அலுவலகம் மந்தவெளி ரோடு
29	31.08.2024	காலை 10 மணி	கடலூர்	துறைமுகம் பகுதி	அழகாநந்தா திருமண மண்டபம் காசுகடை தெரு, கடலூர் ஓடி
30	01.09.2024	மாலை 4 மணி	சிதம்பரம்	பரங்கிபேட்டை வடக்கு ஒன்றியம், பரங்கிபேட்டை பேரூர்	ஓம்சக்தி திருமண மண்டபம் புதுசத்திரம்
31	01.09.2024	மாலை 4 மணி	சிதம்பரம்	பரங்கிபேட்டை தெற்கு	ஜே.ஏ திருமண மண்டபம் பள்ளிப்படை
32	01.09.2024	காலை 10 மணி	சிதம்பரம்	கிள்ளை பேரூர்	அண்ணா படிப்பகம் கிள்ளை
33	31.08.2024	காலை 10 மணி	சிதம்பரம்	குமராட்சி கிழக்கு ஒன்றியம்	ஸ்ரீநிவாசா திருமண மண்டபம் சீர்காழி மெயின் ரோடு உசுப்பூர்
34	31.08.2024	மாலை 4 மணி	சிதம்பரம்	அண்ணாமலை நகர் பேரூர்	ஏ.பி.என் திருமண மண்டபம் ஓபி மெயின் ரோடு அண்ணா மலை நகர்
35	03.09.2024	காலை 10 மணி	சிதம்பரம்	குமராட்சி மத்திய ஒன்றியம்	ராதா கண்ணன் திருமண மண்டபம் வல்லம்படுகை
36	30.08.2024 அன்று நடத்தி முடிக்கப்பட்டது	காலை 10 மணி	சிதம்பரம்	சிதம்பரம் நகரம்	காமாட்சி நடேசன் திருமண மண்டபம் இளமையாக்கினார் கோயில் சிதம்பரம்

முதலமைச்சர் கழக தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைக்கினங்க கடலூர் கிழக்கு மாவட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது அது சமயம் இக்கூட்டத்தில் பட்டியலில் உள்ளவாரு சம்மந்தபட்ட இடங்களில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர், முன்னாள், இந்நாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள்

உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய நகர, பகுதி பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக பொது உறுப்பினர்கள், தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,
வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்,
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

தருமபுரி மேற்கு மாவட்டம் தீர்த்தமலையில் அரூர் கிழக்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் ஒன்றியக் கழகச் செயலாளர் கோ.சந்திரமோகன் ஏற்பாட்டில் தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் தீர்த்தமலை பகுதிகளுக்கு எண்ணற்ற திட்டங்களை அறிவித்த முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்தல், புதிதாக கட்டப்பட்டுள்ள அரூர் பேருந்து நிலையத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞரின் பெயர் சூட்டப்படவேண்டும், தீர்த்தமலையை தனி ஒன்றியமாக அறிவிக்க கோருதல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.நிகழ்வில் மாநில நிர்வாகிகள் கீரை விஸ்வநாதன், எஸ்.ராஜேந்திரன்,மாவட்ட துணைச் செயலாளர் செ.கிருஷ்ணகுமார், ஒன்றிய அவைத்தலைவர் எம்.ஜெய்னுலாபுதீன், வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.வேடம்மாள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

பி.எம்.அன்பழகன் வரவேற்புரை!

செம்பனார்கோயில் வடக்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

மயிலாடுதுறை, செப்.1- மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் வடக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் செம்பனார்கோயில் அண்ணா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றிய அவைத் தலைவர் இரா.சுப்பையன் தலைமை தாங்கினார். மாவட்ட துணைச் செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எம்.அப்துல்மாலிக், அமுர்தவிஜயகுமார், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.சி.என்.விஜயபாலன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர்கன் நத்தம் ஏ.வின் சென்ட், ஜெ.கபிலன், அர்ஷத், பேரூர் கழகச் செயலாளர் எஸ்.கே.முத்துராஜா, ஒன்றியக் குழு தலைவர் நந்தினிஸ்ரீதர், துணைத்தலைவர் பாஸ்கர், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் வி.எஸ்.என்.செந்தில், எஸ்.எம்.சம்சுதீன், சைத்திய நாதன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் வெண்ணிலா தென்னரசன், துளசி ரேகாரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பி.எம்.அன்பழகன் வரவேற்றார்.

கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மருத்துவர் வீரப்பாண்டியன், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.தென்னரசன், ஜி.ஆர்.பிரபாகர், ஒன்றிய பொருளாளர் ஏ.சரவணன், துணைச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், கே.சத்தியராஜ், அமுதா அன்பழகன், மற்றும் சார்பு அணி நிர்வாகி கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:-

2024 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி தமிழகத்தில் 40க்கு 40 வெற்றிக் கனி பறித்த கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்வதோடு, மயிலாடுதுறை நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணியின் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஆர்.சுதா வெற்றிக்கு உழைத்திட்ட செம்பனார் கோயில் வடக்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும், மாவட்டக் கழகம் அறிவித்தது போல் செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியத்தில் முப்பெரும் விழாவை சிறப்பாக கொண்டாடுவது என்றும்,

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கலைஞர் உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயத்தை வெளியிட்ட ஒன்றிய அரசுக்கும், கோரிக்கை வைத்த கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கும் நன்றி தெரிவித்து செம்பனார்கோயில் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நன்றி தெரிவித்து என்றும், பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி சிறப்பாக ஆட்சி செய்யும் தளபதி அவர்களின் தலைமையிலான தி.மு.க. ஆட்சி 2026 சட்டமன்றத் தேர்தலிலும் தொடர்ந்திட தலைவர் தளபதி அவர்களின் இலக்கான 200 இடங்கள் என்ற இலக்கை எட்டிடும் வகையில் செம்பனார் கோயில் வடக்கு ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும் கழகத்தினர் கழக அரசின் திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்து கூறும் வகையில் வரும் சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தை இப்பொழுது இருந்தே தொடங்கிடுவது என்றும், செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும் கிளைக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டத்தை கூட்ட வேண்டும் என்றும், பொது உறுப்பினர்கள் கூட்ட தீர்மான நோட்டை தலைமைக் கழகத்திற்கு எடுத்து செல்லும் வகையில் ஒன்றியக் கழகம் மூலம் மாவட்டக் கழகத்திடம் ஒப்படைக்க தீர்மான நோட்டை அந்த கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள் ஒன்றிய கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலில் அதிக வாக்கு வாங்கி கொடுத்த ஊராட்சிகளின் கிளை செயலாளர்கள் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கும் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது. பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட 800 பேருக்கு லேமினேசன் செய்யப்பட்ட பெரிய கலைஞர் திருஉருவப் படம் வழங்கப்பட்டது.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், விராலிமலை சட்டமன்றத் தொகுதி , அன்னவாசல் தெற்கு ஒன்றிய கழகம் மற்றும் அன்னவாசல் பேரூர் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் கே.எஸ்.சந்திரன் வரவேற்புரையில், ஒன்றிய அவைத்தலைவர் எஸ்.ராஜேந்திரன் தலைமையில், மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் சிறப்புரையில் அன்னவாசல் அண்ணா மஹாலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் தென்னலூர் எம்.பழனியப்பன், ராப்பூசல் எம்.செந்தில்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கே.எஸ். ச.இளையசூரியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி, மாவட்ட கழக துணை செயலாளர்கள் எஸ்.எஸ்.கருப்பையா, பெ.ராஜேஸ்வரி, மாவட்ட கழக பொருளாளரும் புதுக்கோட்டை துணை மேயருமான எம்.லியாகத் அலி, அன்னவாசல் பேரூர் கழக செயலாளர் எம்.எஸ்.ஏ.முகமது ரிசா, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், அ.பிரபா, டாக்டர் அமானுல்லா, சுந்தர்ராஜ், ராயல் ஆர்.சபா, சாங்கிராப்பட்டி ரவி உள்ளிட்ட ஒன்றிய, பேரூர், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்றனர்.